CPA

CENTRE FOR POLICY ALTERNATIVES

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), கடந்த வியாழக்கிழமை, 2013 ஆகஸ்ட் 1ம் திகதி, மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரிய எனுமிடத்தில் இடம்பெற்ற துயரமான சம்பவங்களை மிகுந்த எச்சரிக்கையுடனும் மற்றும் கவலையோடும் கவனத்தில் கொள்கிறது. யுத்தத்திற்குப் பின் இலங்கையில் ஆயுதம் தரிக்காத குடிமக்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான தங்களது ஜனநாயக உரிமையை அப்பியாசிக்கையில் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டு, பாதுகாப்புப் படைகளால் சுடப்பட்டு மற்றும் கொல்லப்படுவதும் இது முதல் தடவையல்ல: 2011 இல் கட்டுநாயக்கவின் ஏற்றுமதிச் செயன்முறை வலயத்தில் மற்றும் 2012இல் சிலாபத்திலும் முறையே, 01 குடிமகன் வீதம் கொல்லப்பட்டுள்ளனர். அதேபோன்று நிகழ்வுகள் தொடர்பாக செய்தி சேகரிக்கும் ஊடகப் பணியாளர்கள் தாக்கப்பட்டு மற்றும் அவர்களது உபகரணங்கள் கைப்பற்றப்பட்டு, சேதமாக்கப்பட்டு அல்லது அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. வெலிவேரியவில் இறந்தவர் எண்ணிக்கை தற்பொழுது 03 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஆயுதம் தரிக்காத குடிமக்கள் - அதுவும் வெலிவேரிய சம்பவத்தில், எதிர்ப்புப் போராட்டத்தில் நேரடியாக சம்பந்தப்படாததாக அறிவிக்கப்படும் இரண்டு இளம் மாணவர்கள் கொல்லப்பட்ட, இந்த சம்பவங்கள் - எமது நாட்டில் சட்டத்தினாட்சி குலைந்து போயுள்ளதினதும் மற்றும் மிக முக்கியமாக, அதன் குடிமக்களால் ஜன நாயக உரிமைகளின் அப்பியாசித்தல் தொடர்பாக அரசாங்கத்தினுடைய மனப் பாங்கின் சோகமான மற்றும் வெட்ககரமானதுமான நினைவூட்டல்களாக அமைகின்றன. அரசியலமைப்பு மற்றும் சட்டக் கட்டமைப்பு என்பவற்றை முற்றிலுமாக உதாசீனம்செய்து சிவில் அதிகாரத்துக்கு உதவியாக ஆயுதப்படைகளை சட்டபூர்வமாக அழைக்கின்ற சந்தர்ப்பங்களின் சூழமைவுகளில், அரசாங்கத்தினால் சட்டத்தினாட்சி மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுதல் தொடர்பில் தீவிரமான மற்றும் அடிப்படையான கேள்விகள் முன்னெழுகின்றன. இந்த சட்டத்துக்குப் புறம்பான செயற்பரப்பில், செயற்றிறனின்மை அல்லது வேறுவகையிலான ஏதும் காரணத்தின் பேரில், சட்டத்துக்கும் ஒழுங்குக்குமான அதன் பொறுப்புகளைக் கைவிட்டு, மற்றும் விசேட படைகள் மற்றும் இராணுவத்தை அழைப்பது இப்பொழுது பொலிசுக்கான ஒரு வழமையான செயல்முறைரீதியான நடைமுறையா? அத்தகையதொரு நிலைமையில் இராணுவத்துக்கு வழங்கப்படும் கட்டளைகள் என்ன? நிஜமான துப்பாக்கி ரவைகள் மற்றும் குண்டுகளைப் பயன்படுத்துவதற்கா?

சுடுவதற்கும் மற்றும் சுட்டுக்கொல்வதற்குமா? உண்மையில், இந்தக் கட்டளைகளை வழங்குவது யார்? இவற்றுக்கான பொறுப்புகளை யார் எடுப்பது? கட்டளைக்கான செயற்பாட்டுரீதியிலான தொடரொழுங்கு என்ன மற்றும் பாராளுமன்றத்துக்கு பதிலளிப்பது யார்? ஓர் தடையற்ற நீதிச் செயன்முறைக்கான சாத்தியங்கள் என்ன?

இராணுவத்தின் புதிய தளபதி, பதவியேற்ற முதல் நாளிலேயே கண்டிக்கப்பட வேண்டிய இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதுடன், இது தொடர்பாக ஓர் உள்ளக விசாரணைக்கு அவரால் உத்தரவிடப்பட்டுள்ளது. அத்தோடு, ஓர் பொலிஸ் விசாரணையும் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் கூட ஓர் விசாரணையை ஆரம்பித்துள்ளது. இந்தச் சம்பவங்களுக்கு மேலும் இழுக்கைச் சேர்க்கும் வகையில், அரசாங்கத்தின் பேச்சாளர்கள் சம்பவத்தில் வெளிநாட்டுச் சக்திகளின் சம்பந்தம் உள்ளதாகவும், அரசியல் கட்சிகளால் வன்முறைகள் அனுசரனை அளிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டியதுடன், சம்பவங்களுக்கு ஊடகங்களையும் கூட பொறுப்புக் கூறினர். மக்களைக் காப்பதற்குப் பதிலாக அவர்களைக் கொன்றளிக்கும் ஒன்றாக இலங்கை அரசு விரைவாக மாறி வருவது மட்டுமன்றி, அதன் குடிமக்களின் நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் என்பவற்றவையும் கூட முழுமையான அவமதிப்புக்கு அது உள்ளாக்குகின்றது.

சட்டத்தினாட்சி மற்றும் சட்டமும் ஒழுங்கும் என்பவற்றின் ஓர் அபாயகரமான அளவிலான சீர்குலைவு என்பவற்றின் காரணமாக ஓர் நம்பகத்தன்மையான, சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற புலன்விசாரணையும், அதன் கண்டறிதல்களின் பகிரங்கப்படுத்துதலும் மட்டுமே, இலங்கைக் குடிமக்களின் கரிசனைகளை அமைதிப் படுத்த முடியும். அத்தகையதொரு புலன்விசாரணை மேற்கொள்வதற்கும் மற்றும் குற்றமிழைத்தோர்களுக்கு அவசியமான நீதிமுறையான தண்டனையை வழங்கத் தவறுவதும், நீதிமுறைமையின் ஓர் பெரும் நீதித் தவறுகையாக, அதன் மக்களுக்கு அரசு அளிக்க வேண்டிய முக்கியமான கடப்பாடான பாதுகாப்பளித்தலிலான ஓர் அடிப்படைத் தவறாகவும், மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் பதிவுகள் மீது தொடர்ச்சியான சர்வதேசத்தின் எதிரிடையான கவனத்துக்கான ஓர் அழைப்பாகவும் அமையும். மதக் குருப் பிரிவுகள் உட்பட்ட அரசாங்கம் மற்றும் அதன் அரசியல் கூட்டுகள் என்பன, வெலிவேரிய சம்பவத்திற்கான தங்களது பதிலில் இந்தக் கரிசனைகளை கவனத்தில் கொள்வதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டத்தினாட்சி மற்றும் சட்டமும் ஒழுங்கு என்பவற்றுக்கு அரசாங்கத்தின் நேர்மையான பற்றுறுதியின் முழுமையான வெளிக் காட்டுதல் இலங்கையில் ஜனநாயக ஆட்சிமுறைமையை உறுதிப்படுத்துவதற்கான அதன் விருப்பு மற்றும் இயல்தன்மை என்பவற்றுக்கான ஓர் நடவடிக்கையாக நோக்கப்படும். அவ்விதம் செயற்படத் தவறுவது வளரும் ஜனநாயகப் பற்றாக் குறையை மேலும் அதிகரிக்கவும் மற்றும் நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சுபீட்சம் என்பவற்றுக்கான எங்களது சாத்தியங்களையும் தடைப்படுத்துவதாக மட்டுமே அமையும்.